131—

தரம் உயர்த்துதல்

*12775—**திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், கிரிசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் கிரிசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது தொடர்பான செயற்குறிப்பு பெறப்பட்டு, தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், கிரிசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 531 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்; அதில், 10 ஆம் வகுப்பில் மட்டும் 143 மாணவர்கள் பயில்கிறார்கள். இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான 2 இலட்சம் ரூபாய் பணம், இந்தப் பள்ளியினுடைய பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் சார்பாக செலுத்தப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவுபெற்றுவிட்டன. அதுமட்டுமல்ல, இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான 5 ஏக்கர் நிலமும் இருக்கின்றது. மேலும், இந்தப் பகுதியிலுள்ள*

மாணவர்கள் மேல்நிலைக் கல்விக்கு 8 கி.மீ. தூரத்திற்கு அப்பாற்பட்டு உள்ள வடசேரி கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்குத்தான் செல்லவேண்டும். பக்கத்தில் இருக்கக்கூடிய வாணியம்பாடி நகரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி கிடையாது. அதேபோல, ஆம்பூர் நகரிலும் அரசு மேல்நிலைப் பள்ளி கிடையாது. ஆகவே, கிரிசமுத்திரம் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் 10 ஆம் வகுப்பு முடித்த பிறகு, மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால், பேருந்து வசதி குறைவாக இருக்கக்கூடிய வடசேரி கிராமத்திற்குத்தான் செல்லவேண்டும். இல்லையெனில், அரசு உதவி பெறுகின்ற தனியார் பள்ளிகளுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே கிரிசமுத்திரத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் கீழ்க்கண்ட நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ரூ.2 இலட்சத்தை பொது மக்கள் பங்களிப்புத் தொகையாக செலுத்தவுள்ள பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மகளிர் பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மலைப் பகுதி, ஆதி திராவிடர் மக்கள் தொகை அதிகமுள்ள இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்; ஊரகப் பகுதியில் குறைந்தது 3 ஏக்கர் நிலம் தேவை; 10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருத்தல்வேண்டும்; ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும், அடுத்த மேல்நிலைப் பள்ளிக்கும் குறைந்தபட்சம் 8 கி.மீ. தூரம் இடைவெளி இருக்கவேண்டும். இதற்கேற்ப பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களிடமிருந்து தொடர்ந்து வேண்டுகோள் பெறப்படுகின்றன. மேற்கண்ட விதிமுறைக்குட்பட்டும், தேவையின் அடிப்படையிலும் அந்தந்த மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட பகுதியிலுள்ள மாணவர்கள் பயனடைவதைக் கருத்திற்கொண்டும்*

நிதிநிலைமைக்கேற்றவாறு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிரிசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தொடர்ந்து கோரிக்கை விடுப்பதால், மேலே தெரிவித்துள்ள அரசின் நெறிமுறைகளை அங்கு பூர்த்தி செய்யுமென்றால், அரசின் நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நடப்பு ஆண்டிலேயே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அத்தனை நிபந்தனைகளும் இதற்குப் பொருந்துகின்றது. அதுமட்டுமல்ல, கடந்த 3 ஆண்டுகளிலே ஓர் அரசு உயர்நிலைப் பள்ளிகூட மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்படவில்லை. (குறுக்கீடு) இந்த ஆண்டு அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணிதரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

132—

பாலம் கட்டுதல்

***27708—திரு. எஸ்.எஸ். ரமணிதரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதி மணியாச்சி ஓடையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?